கலவை சநதனக குங்குமக கள்பமுஞ் சாத்தி
யலகில் மன்மல ரைவகை விலவமுஞ் சாததித்
தொலைவி லிண்டையு மாலையுந தொடைகளுஞ் சாத்தி. ௧௭

அன்பி னாற்றனை யர்ச்சிக்கு மையனை யாற
னன்ப ருப்புடன் பாயசம் பாற்றயிர் நறுநெய்
யின்ப மார்சுவை யமுதமுங் கன்னலு மேந்தி
முன்பு ரைப்படி மகேசுர பூசைமுன் முடித்து. ௧௮

தமது மந்திர தந்திர வழிகளின் வழாம
லமுது மைவகை யுண்டியு மறுவகைக் கறியுங்
குமுத வாயிடை யீந்தடைக் காயமுதல் கொடுத்து
நமமி குத்திடு சோடச பூசையு நல்கி ௧௯

ஐவ கைத்திரு முகங்களு மலரவாச சித்து
மெய்வ கைப்பொது மடத்தினில் வீற்றிருந் தருளத்
தெய்வி கத்திருக் கங்கைநீ ராட்டமுன் சென்ற
சைவ ராசனு மந்தணன் காவலு தாங்கி ௨௦

தற்ப ரச்சிவ சைவருங் கங்கையி னின்று
பிற்ப டத்திகழ் சைவரும் பெருஞ்சபை நிற்ப
வற்பு தத்தினைக் கண்டவ ரறிவிலா மயங்க
விற்பு றத்தினின் மனைவியு மைந்தரு மேங்க. ௨௧

அந்த ணாளனுஞ் சிவபிரா னாமகோன் மென்ன
வெந்தை பூசைசெய் யிருபத்து நாலவரி லொருவன
முந்து பூசையு மெனவெனை முகக்குறை சீறி
வந்த சைவனைப் பலபல வார்த்தையால் வைதான் ௨௨

அழுது போபவ ரந்தத்தினின் முவணங் கொணர்ந்த
தழுவு மீசனுந் தனதுசா தனங்களைக் காட்ட
முழுதும் பூசக ரேனைய போரனைவ ருமுன்னோர்
பழுதி லாவெழுத் திட்டமை பார்த்தத் தயித்தார். ௨௩

உரிய பூசக ரோலையை யொப்புநோப் பார்த்தார்
திரியும் பொய்யெழுத் தாயின திதுவெனச் செப்பி
விரியுஞ் சைவரை நோக்கிநீர் வென்றனிர் விமல
னுரிய பூசையு முமதே யென்றுமெய் யுரைத்தார். ௨௪

அறைந்த காலையி லையனை யாறனும் விண்மேன்
மறைந்து நின்றுநஞ் சைவனை வளம்பெறக் கொணர்மின்
குறைந்து கொள்ளன்மின் காணியு மிருமடி கொடுமி
னிறைந்து செல்வராய் நீடூழி வாழுவீ ரென்றான். ௨௫

செம்பொற் சோதியாந் திருவையா றுடையசெம் பெருமா
னம்ப ரத்தினி னருளிய மொழியினைக் கேட்டங்
கும்பர் வேதியர் மாதவர் யாவரும் பணிந்தார்
கம்பி தஞ்செய்தா ராடினா பாடினா களித்தார். ௨௬

வேறு

திருநி றம்ப வழகன்றன் சேவடி
மருவு சீர்ஞான கூத்தன்வ ழுத்திய
கருணை யையனை யாறன்றன காவியப்
பெருமை கூறுவர் பெறுவர் முத்தியே. ௨௭

அறங்கண் மன்னுக வாதி பரசிவன்
சிறந்த பூசை திருப்பணி யோங்குக
மறங்க ணீங்குக மாதேவ னென்பரா
னிறந்த ரும்புகழ் நீடூழி வாழ்கவே. ௨௮

சைவச் சருக்கம்

முற்றிற்று

ஆகச் சருக்கம் ௧௨.

திருவிருத்தம் (௬௯௭.)

பஞ்சநதிப் புராண மென்னும்

திருவையாற்றுப் புராணம்

முற்றிற்று.

சருக்கத்தின் பெயர்.

—:(0):—

உ

சிவமயம்

கணபதி துணை

திருவையாற்றுப் புராணம்

வசனச் சுருக்கம்.

கடவுள் வாழ்த்து

திருவையாறு என்று எவ்வுலகத்தவரும் ஏத்துதற்குரிய சிவஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஓலவிநாயகர், சபாநாயகர், செம்பொற் சோதியார், பஞ்சநதேசர், அறம்வளர்த்த நாயகியார், ஆதி விநாயகர், முருகக் கடவுள், திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசக சுவாமிகள், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாத முனிவர், தொகையடியார்கள், சனகாதி முனிவர்கள், மற்றை யடியார்கள் இவர்களது ஸ்ரீபாதங்களைப் போற்றி, தேவரும், வேதியரும், மேகமும், மாமுனிவரும், மன்னரும், சைவசமயமும், திருவெண்ணீறும், திருவைந்தெழுத்தும் என்றும் தழைத்து ஓங்குக என வழுத்தி, திருக்காவிரி நதியில் ஸ்நானஞ்செய்து செபபியேசரை வணங்குவார் நலம்பெற இருந்தவராவார் என அன்னார் புகழைத் துதித்து, திருவையாற்றுமான்மியத்தைப் படிப் பாரும் வரைவாரும் கேட்பாரும் சிவசாரூபத்தை யுண்மை யாகவே பெறுவ ராதலின் யாவரும் எளிதின் உணர்ந்து மெய் யின்பம் அடைதற் பொருட்டு, ஸ்ரீ ஞானக்கூத்தர் திருவாய் மலர்ந்தருளிய சபேசப்புராணத்தை எளிய வசன நடையில் யான் எழுதத் துணிந்தது மாணிக்கம் விற்கும் கடையருகே அலைசல் மணியை விற்பது போலாம் ஞானக்கூத்தர் தமிழில் இயற்றியரு ளிய புராணம் வடமொழிப் புராணத்தை ஆதியாகக் கொண்டது, அகஸ்திய மகாமுனிவர் சமுத்திர ராஜனுக்குக் கூறியது, சிவ

பெருமான் திருநந்தி தேவருக்கும் அவர் வியாச முனிவருக்கும் அவர் சூத முனிவருக்குங் கூற அச்சூத புராணிகர் அருளிய புராணங்கள் பதினெட்டனுட் சிறந்த சைவ புராணம் பத்தினுள் மஹா சிவபுராணத்துட் கண்டது, பதிகச்சருக்கம் முதல் சைவச் சருக்கம் ஈறாகத் துவாதச சருக்கங்களாகக் கொண்டது, இந்தப் புராணத்தை இறைவனை இறைஞ்சிக் கேட்டு மகிழ்வோமாக.

க. பதிகச் சருக்கம்.

——:(*):——

நீர்வளமும் ஐந்திணை நிலவளமும் திகழும் சோழ வளநாட்டில் செவ்விய கரும்பும் செந்நெற்பயிரும் செழித்து மிக்கு ஓங்கி வளரும் மருதநில வரைப்பின் கண், ஸ்ரீ தர்மசம்வர்த்தனி சமேதராகப் பஞ்சநதேசுவரர் ஆன்மகோடிகளுக்கு அநுக்கிரகத்தின் பொருட்டுத் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் திருநகரம் ஆகிய திருவையாறு மாமணிகளாலும் ஓங்கும் நிதியாலும் மாதர்கள் நிறைவாலும் அளகாபுரியையும், தண்டலை தரும் பசுமையாலும் மாலை முதலியவற்றின் ஒலியாலும் சூழும் நதி சங்கு திரை தோணி படகாலும் சமுத்திரத்தையும் ஒத்து, தேவரும் முனிவரும் மனிதரும் தக்ஷிணகைலாசம் என்று போற்றித் துதிக்கத் தக்கதாய், சண்பகவனங்களால் ஹேமகிரியோ எனவும், செக்கரொளியால் மேருகிரியோ எனவும், சித்தர் வித்தியாதரரும் மயங்கத்தக்க அரிய காட்சியை உடையதாய், அத் திருநகரம் ஒன்றே கடலைப்போன்ற காவிரிநதி இருகரையிலும் வீசும் மணியாலும், நந்தனவனத்துள்ள சந்தனக் காட்டாலும், சாலிதரு நென்மலையாலும், தண்டலையாலும், பிறவற்றாலும் ஐந்து நிலமும் தன்னிடத்து அமையப் பெற்றது என்று கற்றோர் கூறும் கவின் உடையதாய், தேவதீர்த்தங்கள் பலவற்றிலும் மேலாகி மூழ்குவார்க்குப் பிறப்பிறப்புத் துன்பங்களையும் சகல பாதகங்களையுங் களைந்து சிவபுண்ணியங்களைப் பிரசாதிக்கும் பஞ்ச நதிகளால் அலங்காரமாக விளங்குவதாய், மூவர் முதலிகள் இசைத்தருளிய திருத் தேவாரங்களின் இன்னிசை

கேட்டுத் தேவரும் மானிடருந் துன்றிச் சிவகானத்தால் ஒன்றுபடலாலே இவர் தேவர் இவர் மானிடர் எனத் தெளிந்தறிதற்கேலாத வைபவத்தோடு இலங்குவதாய், அகிற்புகை, கனனலடும் புகை, வேள்விப்புகை, சிவசந்நிதியி லடியாரிடும்புகை, இவற்றால் திசை மயங்கித் தெரிவரிதாய், மடமாதர் விளக்கத்தால் மிளிர்வதாய்ச் சிறந்து பொலியும் இத்தன்மைத்தான ஸ்தலத்தின் விசிட்டமும், இதன்கண் எழுந்தருளி விளங்கும் மூர்த்தியின் மான்மியமும், ஆங்குள்ள புண்ணிய தீர்த்தங்களின் பெருமையும் என்னறிந்து எடுத்துரைக்க வல்லேன! அவன் அருளாலே யான் எடுத்து உரைக்கக் கூடுமேயன்றி வேற்றால் அமையாது.

அஃது எங்ஙனம் எனின், முன்னொரு கற்பத்தில் பிரமா, விஷ்ணு, ஆதிய சமஸ்த தேவர்களும் திருக்கயிலாய மலையிற் சென்று தேவதேவப் பிரானைப் பணிந்து தமக்குத் தானவரால் உண்டாகும் வருத்த மிகுதியைத் தெரிவித்துத் திருவருளால் தெய்வவலியும் தெய்வப்படையும் பெற்றுத் தானவரை வென்று மந்தரமலையிற் சென்று களிப்பினால் சிவபரஞ்சுடரின் பெருங் கருணையையும் பிரபுத்துவ சாமர்த்தியத்தையும் மறந்து தம்மையே மதித்து யாவும் தம் செயலெனக் கருதி இறுமாந்தனர். அக்காலை கருணாகரக்கடவுளும் காருணிய சொரூபத்தை யுடைய கருந்தடங்கண் உமாதேவியும் இயக்கர் இயக்கியாகத் திருவுருக்கொண்டு மந்தர சைலத்தில் எழுந்தருள, அவரைக்கண்ட தேவர் அக்கினியை யழைத்து அவர் இன்னாரென்று அறிந்துவா வென, அவ்வனற் கடவுள் அவர் முன்னின்று வினவ, இறைவன் சிறுதுரும் பொன்றை வைத்து இதனை எரிப்பாயாக என, தீக்கடவுள் இருமுறை முயன்றும் எரிக்க முடியாமல் மறைந்தனன். அதன்பின் தேவர் அனலோன் வாராமையை யெண்ணி வாயுவை அனுப்பினர். அவனும் அவ்வண்ணமே சென்று இறைவனை வினவுகையில் பெருமான் அத்துரும்பை அசைக்கும்படி அவனைக் கேட்க, மாருதம் இருமுறை முயன்றும் அசைக்க முடியாமல் மறைந்து கொள்ள, காற்றின் கடவுள் திரும்பாமை கருதி இந்திரன் தானே வந்து பார்க்கையில் இறைவியார் மாத்திரம் எழுந்தருளி யிருப்பதைக்கண்டு பணிந்து இறைவரைப்பற்றி விசாரிக்க, அம்பிகை 'நம் போல்வார் கண்ணிற்கு அவர் தோன்றார், நீர் தேடிவந்த காலும் கனலும் மறைந்து போயினர்' என்ற மாத்திரத்தில், இந்திராதி

தேவர் அனைவரும் இறைவனுடைய அனந்த சக்தியை வியந்து பாராட்டி, அவனன்றி யோரணுவும் அசையாது என்னும் ஆப்த வாக்கியத்தின் உண்மை தேர்ந்து, சக்தி சகதர்களைப் பணிந்து பேறு பெற்றனர். இங்ஙனமாதலின் சிவனருளன்றி வேறோர் திரணமு மசையா தென்றே யுபநிடதங்களிற் கேட்டு உளத்தும் தெளிந்தேன்; அவன் திருவருளைத் தியானித்துச் சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை முந்தை விளம்பிய முறைப்படி மொழி கின்றேன்.

---

௨. குறுமுனிச் சருக்கம்.

—— (*)ஃ——

திரிபுரங்களை யெரித் தருளிய சிவபிரானை வணங்கி ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபித்தவர் சித்தி முத்தியைப் பெறுதலி னாலே செப்பியேசுரமென்று திருவையாற்றைச் சொல்லுவார் கள் அந்த க்ஷேத்திரத்தால் அகத்திய முனிவர் குறுமுனியாகிய கதையைச் சொல்லுவன். சூரியவருண னென்பவனுடைய வீரி யம் விழுந்த கும்பத்திலே பிறந்தவரும், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் பன்னிரண்டு நாட்டிலுள்ளவருந் தெரி யச் சொல்லினவரும், ஒளித்துக் கொண்டிருந்த வலா சூரனை வெளிப்படுத்தும் பொருட்டுக் கடற் சலத்தை உள்ளங்கையி லடக்கி உண்டவரும், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருவடிகளைச் சிர மேல் தாங்கி மேலான யோக ஞானம் பெற்றவரும், சிவபெருமா னிடத்திலே தரும மெல்லா வற்றையுந் தெரிந்து கொண்டவரும், அவ்வெம் பெருமான் திருவடிகளை ஆலோசனையினாலே யறியும் விசேடமுடையவரும், விந்தமலையைப் பாதலத்தில் அழுத்தின வரும், வில்வலன் வாதாவி யென்னும் அசுரரைக் கெடுத்தவரும், தென்பூமி சமமாகும்படிப் பொதிய மலையிலிருந்தவரும், தாமிர பருணி நதியை வரவழைத்தவரும், காவிரி நதியைக் கமண்டலத் திற் கொண்டு வந்தவரும், அந்நதியின் அமிசமாகிய உலோபா முத் திரை யென்பவளை விவாகஞ் செய்து கொண்டவரும், நான்கு வேதங்களைக் கரை கண்டவரும், அட்டமாசித்திகளை விருத்தகிரி

நாதரிடத்திலே தெரிந்துகொண்டவரும், சிவபிரான் திருநடனத்தின் பெருமையை யறிந்தவரும், ஆயிரம் பேய்களைத் தேவர்களுடைய தலைவராகும்படி வைத்தவரும், இந்திரனாகிய நகுடன் மலைப்பாம்பாகச் சபித்தவரும், சிவதருமோத்தர நூலைச் சிவபிரானிடத்துக் கேட்டுத் தெளிந்து கொண்டவரும், பன்னிரண்டு மாணாக்கர்களுக்குப் பஞ்ச லக்ஷணங்களைப் போதித்தவருமாகிய அகத்திய முனிவர் அநேக மாதவர் கூட்டத்துடன் திருவையாறென்னும் க்ஷேத்திரத்துக்கு வந்து, சூரிய புட்கரிணியைச் சூழப்பெற்ற திருக்கண்டியூர் முதலிய சப்த ஸ்தானத்தில் வசிக்குங் காசிபர் முதலிய சப்த ருஷிகளையுங் கண்டு, மீண்டு சூரிய புட்கரிணியிலே ஸ்நானஞ் செய்து, நித்தியகன்மானுட்டானங்களெல்லா முடித்துச் செம்பொற் சோதியாரை வணங்கி நின்று பலவகையாகத் தோத்திரஞ் செய்து, திரிகாலமுந் தவறாமற் பிரதக்ஷிணஞ் செய்து பன்னீராயிரம் பஞ்சாக்கர ஜெபஞ் செய்து, அட்டாங்க யோகத்திலே பயின்று காய் கனி சருகு முதலியவைகளே யுணவாகப் பலநாள் அரிய தவஞ் செய்துகொண்டிருந்தனர்

இவ்விதந் தவஞ் செய்திருந்துஞ் செம்பொற் சோதியார் திருக்காட்சி கிடைக்கப் பெறாமல் வருந்திக் கிழங்கு முதலிய உணவுகளையும் உண்ணாமல் நித்திரையை விட்டுப் பேச்சு மில்லாமல் பிராண வாயுவை இடைபிங்கலை நாடிகளிற் செல்லவொட்டாமல் தடுத்துச் சுழுமுனை நாடி வழியே செலுத்தித் தமது சடைகளெல்லாம் நிலத்திலே வேரூன்றும்படி பஞ்சாக்கினி மத்தியிலே நின்று சூரிய புட்கரிணி தீர்த்தக் கரையில் யோக நிட்டைகூடிச் சிவபிரானைப்போல அக்கினிமய மடைந்திருந்தனர்

இந்தப்படி யிருக்கும்போது காலம் வெயில் காற்று பனி முதலியவை யொன்றையும் அறியாது சரீரமெல்லாம் வெந்துருகிய தன்மையைச் செம்பொற் சோதியார் திருவுளத்திலே தெரிந்து விஷ்ணுவாகிய இடபவாகனத்தின் மேல் தமது அவயவங்களெல்லாம் விளங்கித் தோன்ற உமாதேவியோடு சகல வாத்திய ஓசைகளும் முழங்க எழுந்தருளி வந்து தரிசனங் கொடுத்தருளினர். அகத்திய முனிவர் ஆனந்த மேலீட்டாற் சொல்லி யருளிய தோத்திர மெல்லாவற்றையுங் கேட்டுத் திருவுள மகிழ்ந்து 'உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்' என்று திருவாய் மலர்ந்தருளி

னர். அகத்தியர் 'சுவாமி அடியேன் உமது திருவடிக்குக் கீழடங்கி நின்று தோத்திரஞ் செய்ய ஒரு சிறிய வடிவந் தந்தருள வேண்டு'மென்று பிரார்த்திக்க, அவ்வாறே குறள் வடிவத்தைக் கொடுத்து 'உன் பெயர் குறுமுனியாகுக' என்று செம்பொற் சோதியார் கட்டளையிட்டருளினர். இவ்வாறு அகத்திய முனிவர் குறுமுனியானாலும் எல்லா இடங்களிலுஞ் செல்லுவர், எல்லாச் செய்கையுஞ் செய்வர், இவரைச் சிறியவரென்று சொல்ல முடியாது. இது நிற்க, இனிமேல் குறுமுனியாகிய அகத்திய முனிவர் திருக்கயிலாயத்துக்குச் சென்ற கதையைச் சொல்லுகின்றோம்.

௫. கயிலாயச் சருக்கம்.



அகத்திய முனிவர் பின்னர் நிலையினின்று நீங்கிய பரம சிவனது இரண்டு பாதபங்கயங்களிலும் வீழ்ந்து பணிந்து பாடுதலுஞ் செய்து, 'வஞ்சகமில்லாத மெய்யடியார்க்கு அன்பனே, அடியவர்கட்கு எல்லாம் இன்பக்கடலே, உயிர்களை எல்லாம் காப்பவனே, என் மனம் திருக்கயிலையைக் காண விழைகின்றது' என்று கூறிப் பணிய, ஆலகால விஷத்தை யுண்டருளிய பரஞ்சுடராம் பெருமான் கும்ப முனிவருக்கு முன் தோன்றி, 'சிறப்பு மிக்க முனிவனே, நமது ஐம்பத மந்திரத்தை நீ ஓதிக்கொண்டு சூரிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தால் பிரகாசமுள்ள வெள்ளி வெற்பையும் அதன் மேல் நம்மையுங் காண்பாய், நித்திய சித்தன் ஆவாய்' எனக் கூறி மறைந்தனர். மறைதலும் முத்தமிழ் முனிவர் காளகண்டம் பொருந்திய வள்ளலை மனத்து இருத்திப் பொலிவுற்ற சூரிய தீர்த்தத்தில் மூழ்கினர். அம்மாத்திரத்து அம்முனிபுங்கவர் கயிலைத் திருமலையைச் சேர்ந்தனர்.

அந்தக் கிரியின் பக்கங்களி லெல்லாம் பல்லாயிர யோசனை யுயரமும் அகலமு முள்ள பளிக்கு மாடகூடமும் மாளிகையும் மடமுங் காணப்பட்டன. ஒருபால் ஆச்ரமும் ஒருபால் ஆரண முடி முழங்கின. ஓர் பக்கல் யோக மார்க்கத்தைப் போதிப்பாரும் ஓர்பால் ஞானகலைகளை யுபதேசிப்பாரும் இருந்தனர். ஓர்புறம்

பூத கணமும் ஓர்புறம் சித்தர் கணமும் பொலிந்து நிற்க, கை கொட்டிப் பாடுவார் பலர், தலையசைத்து ஆடுவார் பலர்; ஆடும் மாதர் பலர், பாடும் மாதர் பலர். இந்நிலைமைக்கண் உலோபாமுத்திரை கேள்வர் திருமலையில் நந்திதேவர் வாயிலை விரும்பி யணுகி உமாபதியினது திருமுன்றிலைச் சார்ந்து, அவரது நீலகண்டத்தையும் முடிப்பிறையையும் சூலத்தையும் கபாலத்தையும் அபய வரத கரங்களையும் நுதற் கண்ணையும் சத்திபாகத்தையும் பாதங்களையும் அழகிய பவளம் போன்ற திருமேனியையும் பக்கத்தில் அப்பெருமானது திருக் குமாரர்களையும் தரிசித்துக் கண்களில் நீர் பெருக உரோமபுளகம் எழ வாய்குழறப் பரவசத்தால் துதித்து இறைஞ்சினார்.

அச்சமயத்துக் கயிலாயபதியானவர் முனிவரை நோக்கி, 'அகத்தியா, நீ யாது கருதி இங்கு வந்தனை? இப்போது தென்றிசை உயர்ந்திருக்கின்றது, அங்கு நீ செல்லின் அத்திசை சமமாகும்' என்றுரைத்தார். குறுமுனிவர் உடனே பரமபதியைப் பணிந்து திரும்ப வருகையில், இடைக்கண் உயர்ந்து தோன்றிய விந்தியமலையைக் கையாற் பாதலத்தில் அழுத்தி, அப்பால் வாதாவி வில்வலன் இருவரையுங் கொன்று, தென்றிசை வருங்காற் புலியூர்ச் சிற்றம்பலத்தில் பஞ்ச கிருத்திய நிருத்தஞ் செய்யுஞ் சிற்சபேசனைத் தும்புரு நாரதர் வணங்கிக் கீதம்பாடுதலால் மேலுள்ள மலையுங் கீழுள்ள மரமும் உருகுவதைக் கண்டு தாமும் மனங் கசிந்து உருகி, உருகிய அம்மலைத் துண்டம் ஒன்றைக் கைக்கொண்டு மதுரைத் திருவாலவாயை அணுகிச் சோமசுந்தரக் கடவுளை வணங்கி அங்குள்ள மண்டபத்தை யடைந்து தாம் கொண்டுவந்த மலைத்துண்டத்தை அம்மண்டபத்தின் படிகவடிவக் கலைக்குப் பீடமாக வைத்தார்.

ஆங்கு நின்றும் கும்பமுனிவர் வழிக்கொண்டு குறும்பலாவில் திருமாலைப் பரமேசனாக எண்ணிப் பாட, நாராயணரும் உருகினார், அவ்வாறு உருகிய வைகுந்த நாதனைத் திரட்டிக் குறுக்கிச் சிவலிங்கம் ஆக்கினார். ஆதலால் அத்தலத்திற்குத் திருக்குற்றாலம் என்னும் பெயர் ஆயிற்று. அதன்மேற் கலசோற்பவர் திருக்குற்றால நாதரை வணங்கி வரம்பெற்றுப் பொதியமலையை யடைந்து அங்கே குருந்த விருட்சத்து அடியில் வீற்றிருந்தருளும் பெரிய

பிராணனைத் துதித்துக்கொண்டு அமர்ந்திருக்கும்போது, பூமி எப்பக்கமும் ஒத்த நிலையை யடைந்தது.


௪. காவிரிச் சருக்கம்

முனிசிரேஷ்டராகிய அகஸ்தியர் கமுகு கதலி புன்னை வன்னி மா தென்னை சண்பகம் முதலிய சிறந்த விருக்ஷங்கள் நிறைந்ததும், எண்ணில்லாத முனிவர்களும் தேவர்களும் இயக்கர் விஞ்சையர்களும் சூழ்ந்ததும், தம்பொருட்டு என்றும் உறைவிடம் ஆவதும் ஆகிய பொதிய மலையிற் சிவபூசை செய்து பலநாள் தங்கினபின், திருவெண்காட்டை யடைந்து வேத புஷ்கரிணியில் மூழ்கி, மேன்மை பொருந்திய சுவேதாரணியப் பெருமானை வணங்கித் திருவைந்தெழுத்தைச் செபித்துக் கொண்டிருக்கையில், சமுத்திர ராஜன் அங்கு வந்து விசேஷ பூஜைசெய்து அம்முனிவரிடத்து வர, அவர் அவனுக்கு ஆசனங் கொடுத்து அவன் விருப்பத்தை வினவினர். அவன் விரைந்து எழுந்து அவரை நோக்கி, 'காவிரி என்னும் பாவை நான்முகன் மனசிற் பிறந்தவள், சகல கலைகளையும் தெரிந்துணர்ந்தவள், பூமியிற் பாவங்கள் அனைத்தும் போக்குந் தகுதி வாய்ந்தவள், லோபாமுத்திரை என்னும் திருநாமம் பெற்றவள், கவேரன் என்னும் அரசன் பெருந் தவத்தால் அவனுக்குப் புத்திரியாக அமைந்தவள், பேரழகிலும் கல்வி கேள்விகளிலும் நற்குண நற்செய்கைகளிலும் உலகத்துப் பெண்கள் எவரும் அவளுக்கு நிகராகார், அத்தகையவளை நீர் விதிப்படி விவாகஞ் செய்து கொண்டீர். அவளுக்குப் பெண் வடிவமும் நதி வடிவமும் உண்டு, அவற்றில் தீர்த்தவுருவினை இவ்வுலகிற் கொடுப்பீராயின் இங்கு நிறைந்த உயிர்கள் யாவும் மகிழ்ந்து வாழும்' என்று வேண்டினன். அதற்குக் குறுமுனிவர் அவ்வாறே யளிப்பதாகக் கூறிச் சையமலையைச் சார்ந்து கவேரனைப் பார்த்துச் சமுத்திர ராஜன் தூய்மை அடைதற் பொருட்டுப் பொன்னியின் புண்ணிய நதி வடிவத்தைத் தாம் கொண்டு செல்வதாகச் சொல்லிக் காவிரி நீர் வடிவினைத் தமது கமண்டலத்துச்

செறித்து ஓரிடம் வைத்து மறைவில் தங்கினார். அச்சமயம் விநாயகப் பெருமான் காகமாகச் சென்று கமண்டல தீர்த்தத்தைக் கவிழ்த்தார். அப்புனித நீர் சூரிய புஷ்கரிணியில் அமிழ்ந்து சந் கலையுடன் சாகரத்தை யடைந்தது. கும்பசம்பவர் தம் கடன் முடித்து வந்து பார்த்துத் தமது கருத்தை ஐங்கரப் பெருமான் முடித்தருளினார் என்று மகிழ்ந்து, திருவையாற்றை யடைந்து ஐயாற்றப்பனைக் கண்டு கண்புனல் ஒழுகத் தொழுது வணங்கிப் பல முறை வலஞ்செய்து திருமுன்பு எய்தி உருத்திரசமகம் ஸ்ரீ பஞ்சாக்ஷரம் ஓதி விதிப்படி பூஜோபகரணங்களைக்கொண்டு அபிஷேக நீராட்டி நறுமலர் சாத்தி அறுசுவை யமுதூட்டிப் போற்றித் துதித்து, மோக்ஷத்தையும் போகத்தையும் விரும்புவார் சிவனையும் சிவனடியாரையும் போற்றுதல் வேண்டும். ஆதலின் அத்தலத்தில் மகேசுர பூசையும் பாகேசுர பூசையும் செய்து, திருச்சாய்க்காடு என்னும் தலத்தை யடைந்தார்.

சாபாவனப் பிராஜேச சிவாகம விதிப்படி அநுஷ்டித்துக் கொண்டிருந்த வருணன் வடகலை தென்கலை புணர்ந்த மாமுனிவரிடம் வந்து பணிய, அவர் கடற்கிறைவனை முகம் நோக்கி, 'காவிரி தீர்த்தம் நினைத்தே யெய்தியதோ? இனி உலகிற் றுன்பம் இல்லையே! புண்ணிய காலங்களிற் சுத்தராய்க் காவிரி சங்கமத்திற் படிந்தாடுவோர் பாதகம் பலவும் பஞ்சுபோற் பறக்கும். அதனை யடைந்தாலும் நினைந்தாலும் கண்டாலும் சகல பீடைகளும் தணிந்து மற்ற ரோகங்களும் நீங்கப் பெற்றார் சர்வசித்தியும் முத்தியும் புத்தியும் பெறுவது திண்ணம்' என்று உறுதி கூறினார். வருணன் இந்நடியை இறைஞ்சி, 'பிரபுவே, இம் மூன்று நாளவரை எங்கு உறைந்து என் செய்தீர்' என்று பிரார்த்திக்க, செந்தமிழ்ப் பரமாசாரியார் தாம் பஞ்சநதக்ஷேத்திரத்திற் செப்பேசுவரரையும் அவ்வீசரடியாரையும் வைதிக சைவவழி நிற்கும் அந்தணரையும் பூசித்த விருத்தாந்தத்தை விளம்பினார். அதனைக் கேட்டயாத்திரத்து வருணராசன் அச்சிவத்தானத்துப் பெருமையும் அவ்வீசன் அருமையையும் உமைநாயனார் சீரும் மெய்யடியார் சிறப்பும் விவரித்து உரைக்க வேண்ட, அவற்றைச் சைவ முனிவர் முறைப்படிச் சொல்லத் தொடங்குவார்.

௫. பஞ்சநதிச் சருக்கம்.



அநாதி நித்த முத்த சித்துருவானவர் சிவபெருமான், அநாதி நித்த மங்களவடிவாக விளங்கும் பஞ்சநதித்தலத்துள்ள மகாலிங்கம், அநாதி நித்த புனிதஸ்தலமாக உள்ளது செப்பியேசுரம்; அநாதி நித்த சுத்தமாயுள்ளன திருவையாற்றுள்ள புண்ணிய தீர்த்தங்கள். சர்வ வியாபகராய் விபுவாய் அமர்ந்தருளியிருக்கும் இச்சம்புவின் பெருமையைச் செப்புவார் ஒருவரும் இலர். பரமசிவனது திவ்விய கரங்களாற் படைக்கப்பட்டது இத்திருவையாறு. இத்தலத்தில் யாவனாயினும் ஒருவன் விருப்பமுற்று வசித்தானேனும் அவன் பாவம் அனைத்தும் நீங்கும். மாபாதகன் ஒருதரம் திருவையாறு என்று உரைத்திடில் அக்கணத்தே அவன் புண்ணியாத்மா ஆவான். இப்பதி தவமில்லாதவர்க்கும் தவமுத்தியைக் கொடுப்பது, உயர்ந்த சிவதலங்களிலும் உயர்ந்த சிவதலம், திருக்கேதாரத்திலும் உயர்ந்தது, இதனை நண்ணுள்ள காவிரி கங்கையினும் புனிதமானது. இத்தலத்துப் பிறந்தார் வசித்தார் இறந்தார் யாவரும் புத்தியும் சித்தியும் பத்தியும் முத்தியும் அடைவர், இது சத்தியம் சத்தியம். ஏனைய மற்றைய பல புண்ணிய நதிகளிற் பலநாள் ஆடினாலும், காவிரிநதியின் இதர துறைகளில் பலநாள் முழுவதும் ஆடினாலும், ஐயாற்றுக் காவிரித்துறையில் ஒரு நாள் ஆடிய பலனை ஒருவர் அடையார். இங்கு ஒரு மதிபாடுவார் பலன் எடுத்துக்கூறவும் வேண்டுமோ? பிரமகத்தி, களவு, கள், ஆசான் பன்னியைத் தீண்டல், இப்பாவமுடையாரோடு இணங்கல் ஆகிய பஞ்சமாபாதகங்களும் சூரிய புஷ்கரிணியில் ஸ்நானஞ் செய்து பஞ்சநதேசரைத் தரிசிக்க நீங்கும். இத்தலத்துப் பிறந்தாரை அம்மையும் அப்பரும் தமது அருமைப் புதல்வரைப்போற் பேணுவர். இத்தலத்து வசிப்பாரைச் சிவபெருமான் முருகப்பிரானை யொப்பக் கருதுவதால் அன்னார் சதமருப்பம் இல்லாமலே சதானந்தராக வாழ்வார், அஷ்டமாசித்தி, அஷ்டாங்க யோகபலன், எண்வகைக் காட்சி, விஞ்ஞானப் பிராப்தி, மும்மூர்த்திகள் பதம் யாவும் பெறுவர்.

இவ்வாலயத்தில் தாமரை நூலிட்டுப் பசுவின் நெய்யால் ஒரு விளக்கிட்டார் இறைவன் உலகத்து ஒரூழியும், பலவிளக்கிட்டார்க்குப் பல்லூழியும், எருமை நெய்யால் விளக்கிட்டார் அமரருலகத்து நெடுநாளும், ஆமணக்கு நெய்யாலிட்டார் போகபூமியிற் பலகாலமும், எள் நெய்யாலிட்டார் திருக்கயிலாயத்துக் கற்பகாலமும் வதிந்து ஆங்காங்குள்ள போகத்தையும் இன்பத்தையும் துய்ப்பர். இத்தலத்தில் நந்தனவனம் வைத்தல், மலர் கொய்து மாலை தொடுத்தல், திருப்பள்ளித் தாமம் சாத்தல், முதலிய சரியைகளையும், சிவபூசை செய்தல் முதலிய கிரியைகளையும், யோக முயற்சியையும், ஞான நூற்கேள்விகளையும் செய்தார் ஏனைத் தலங்களிற் பார்க்கப் பன்மடங்கு சிறந்த பலனை அடைவார். எண்ணெய் திருடவந்த எலி சுடரைப் பிரகாசிப்பித்த புண்ணிய விசேஷத்தால் மூன்றுலகங்களை ஆண்டதும், மங்கையை அணைவான விளக்கைத் தூண்டப் பேறு பெற்றதும் உலகம் மூன்றும் அறியுமே. இச் சிவபிரானுக்குச் சுகந்தங்கள் முதலிய உபகரணங்களைக் கொணர்ந்து கொடுப்பவர் சிவபுரத்தமருவர், நித்திய நைமித்திகங்களை நடத்துபவர் சிவபோகம் எய்துவர். அடியார்க்குத் திருவமுதூட்டும் அரிய மாந்தரும், சிவபரஞ்சுடரைக்கருதி வேள்வியாதி கடன்களைச் செய்யும் அந்தணரும், அறுசமயத்தவர்க்கு உண்டியளிப்பவரும் இத்தலத்து விரதம் உபவாசம் சாந்தி படனம் பிதிர்க்கடன் தேவர்கடன் யஞ்ஞம் செய்பவரும் கிடைத்தற்கரிய பேரின்பம் பெறுவர்.

ஆதிகாலத்தில் பஞ்சநதீசனைச் சைவாகம விதிப்படி பூசித்துப் பிரமதேவர் சிருஷ்டித் தொழிலையும் திருமந்திரத்தையும், திருமால் ஸ்திதிகிருத்தியத்தையும் சக்கரத்தையும், சூரியன் வாமதேவன் சித்தர் சப்தரிஷிகள் வசிஷ்டர் அகஸ்தியராகிய நான் அடையவேண்டிய மெய்ப் பேறுகளும் பெற்றுயர்ந்தது புராணப் பிரசித்தமன்றோ! சிலாத முனிவர் இச் சிவபிரானை உள்ளன்போடு பூசித்துத் திருநந்தி தேவரைத் திருக்குமாரராகப் பெற்றார் என்று அகஸ்திய மகா முனிவர் கூறியவளவில், வருணராஜன் அவ்வரலாற்றைக் கூறுமாறு விண்ணப்பிக்கக் குறுமுனிவர் தொடங்கலுற்றார்.



௬. சிலாதமுனிச் சருக்கம்.

—(※)—

முன்னொரு காலத்தில் ஸ்ரீ கயிலாயபதியின் ஆக்ஞைப்படி சிலாதமுனிவர் பாவிகள் இருக்கும் இடத்தைப் பார்த்தற் பொருட்டு இயமலோகம் செல்ல, காலன் அவரை வணங்கி, அவர் இரப்போர்க்கு இல்லையென்றபடியால் கல்லை யுணவாக அருந்தி வரவேண்டிற்று என்றும் அஃது அநுபவத்தால் நீங்கும் என்றும் கூறி, அப்பால் நரகவேதனைப் படுவோர் யாவரையும் அந்தந்த நரகங்களிற் சென்று படும்பாட்டையும் காட்டினன். சிலாதர் அவர்களைப் பார்த்து மனம் வருந்திச் ‘சங்கர சங்கர’ எனச் சிவ நாமோச்சாரணஞ் செய்து, அதன்பின் ஓரிடத்தில் வருந்து வாரை நோக்கியவர் கதியை யுசாவ, தண்டன் மூவேழ் தலைமுறையினரையும் பிண்டதர்ப்பணாதிகளாற் கரையேற்றுதற்குரிய நன்மக்களைப் பெறாதார் கதி இதுவாகும் என, முனிவர் தமக்குப் பிள்ளை இல்லாத குறையை உன்னி அக்குறையை நீக்கிக் கொள்ளும் எண்ணத்தோடு பூவுலகில் விசேடித்த தலமாகிய திருவையாறு அடைந்து விதிப்படி பஞ்சநதப் பெருமானை அருச்சித்து நிட்டைகூடிக் கல்லே உணவாகக்கொண்டு கடுந்தவம் இயற்றியும் காணுதற்பெருமான காட்சியைக் கண்டிலர். அப்பால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் சிவமூலமந்திரத்தைக் கணித்து அயனரி தீரத்தத்தின் முழுகிக் காரண காரியங்கள் கடந்த கருணாநிதியைச் சிவாகம நெறிப்படிப் பூசித்தார் சிலாத முனிவர். அதற்குத் திருவுளம் பற்றினராய்ப் பஞ்சநதேசர் தருமசமவர்த்தனியோடு மழவெள்விடையேறி முனிவர்க்குத் திருக்காட்சி அளித்து, அவர் மனக்கிடக்கையை அறிந்து, ‘முனிவனே, சகலகலை வல்லவனும் சகலகுண சம்பன்னனும் விளங்கும் சற்குமாரனை யுனக்குத் தந்தோம், அவன் பதினாறாண்டளவு உன்னோடு இருப்பான், நீ வேள்வி செய்யுங்கால் அவ்வுழியில் அவனைக் காணலாம்’ என்று வரம் அருளி மறைந்தனர். சிலாதர் தம் பத்தினியோடும் அகமகிழ்ந்து யாகஞ் செய்தற்பொருட்டுக் குற்றமில்லாத பூமியிற் பொன்னேர் பூட்டியுழ, அப்படைச்சாலில் பெட்டியில் அழகிய ஆண்மகவு இருக்கக் கண்டு அன்புடன் எடுத்து அதனைத் தன் பாரியை

கையிற் கொடுத்து அருமையோடு வளர்த்து வந்தனர். அக்குழவி யும் செப்பியேச்சுரன் என்று நாமகரணஞ் சூட்டப்பெற்று வளர்ந்து, சகல கலைகளையும் ஓதி யுணர்ந்து, பதினொன்கு வயதான வுடன் மாதா பிதாக்களின் மனவருத்தத்தை நோக்கி நித்தியத்து வம் பெறுங் கருத்தினை யுட்கொண்டு, ஐயேசர் திருவாலயத்தை யடைந்து தான் ஓதியுணர்ந்த சைவாகமங்களின் பத்ததிப்படியே அப்பெருமானைப் பூசிக்க, வள்ளல் பெருந்தகை பிரத்தியக்ஷமாகி 'வேண்டும் வரம் யாவை' என்ப பதினாறு திவ்விய வரங்களை அத் திருக்குமாரர் பெற்றனர் அவ்வரங்களா ஆவன —

"மறைகள் ....வேண்டுமால"

என்பன [இவ்வரங்கள் பதினாறும் கூறும் செய்யுள்கள் இப்புரா ணம் ௬-வது சருக்கத்து ௬௬-எ() கவிகள் ஆதலின் அவற்றை யாவரும் மனனஞ் செய்தல் நலம்] செப்பியேச்சுரர் தமது புதல்வராகிய செப்பியேசுரருக்குப் பதினாறு வரங்களையும் ஈந்து கரந்தமை யுணர்ந்த சிலாதரும் அவர் தேவியாரும் மகிழ்ந்து வாழ்ந்தனர். இதன்பின்னர் செப்பியேசுரர் எனனும் திருப் புதல்வர் திருவையாற்றில் ஐவகை நீரும் ஆடிய திருநந்திதேவ ரான சைவமாக கதையைக் கூறுதும் வருணனை கேட்பாயாக என்று குறுமுனிவர் உரைக்கின்றார்

எ. நந்திகேசுவரச் சருக்கம்.

சிலாத முனிவருடைய திருப்புதல்வ ராகிய செப்பியேச்சுர ரானவர் திருவையாற்றின்கண் வீற்றிருக்கும் செப்பியேச்சுரப் பெருமானாது திருவுருவத்தை நற்பேறு முற்றுதற் பொருட்டுக் கங்கைநீர், கமலத்தோன் கமண்டலநீர், உமையம்மை கொங்கை யின்நீர், கொண்டல்நீர், குணநந்தி வாயின்நீர் (இவ் வைந்து தீர்த்தங்களின் திருநாமத்தைக் கடவுள் வாழ்த்து ௬-வது செய் யுட் குறிப்பிற் கண்டு கொள்க.) என்பவற்றால் அபிஷேகம் பண் ணிச் சிவானந்தம் அடைந்தார் இக்காரணத்தால் இத்தலத்திற் குப் பஞ்சநதி யென்று நாமம் உண்டாயிற்று. இவ்வாறு அபிடே

கிக்கப்பட்ட சிவபெருமான் திருவுளங் களித்துத் திருக்குமாரருக்குத் திருநோக்காலும் பரிசத்தாலும் திருவாக்காலும் பாவனையாலும் அருணைக்காலும் யோகத்தாலும் அருநூலாலும் அருள் பெருக்கித் திருவடிதீக்ஷை செய்து மலங்களைந்து திருநந்திதேவன் என்று திருநாமஞ் சாற்றி யிவர்ந்து, சனற்குமார முனிவர்க்கு அந்நந்தி பிரானைக்கொண்டு தீக்ஷை செய்வித்துத் திவ்விய சிவஞானோபதேசமுஞ் செய்வித்தார். அதன்மேல் நந்திபெருமான் ஸ்ரீகைலாச பர்வதஞ் சென்று, பார்வதிநாயகனை அவருக்குத் தமது சாரூபத்தையும், தாம் பிறர்க்கும் அக்கிரிக்கும் ஏனைச் சிவத்தானங்களுக்கும் காவலுரிமையையும், சிவகணங்களுக்கு நாயகராகிய அதிகாரத்தையும், அதற்கேற்ற சுரிகை பிரம்பு முதலிய சின்னங்களையுங் கட்டளையிட்டருளினார். சிவசாரூபம் பெற்ற நந்தி பெம்பிரானுக்கும் சிவபிரானுக்கும் வேறுபாடு தெரியாமையை உமையம்மை ஸ்ரீகபிலைய நாதருக்கு விண்ணப்பித்ததையுணர்ந்த நந்திதேவர் சிவகணங்களுடன் ஐயாறு அடைந்து, விதிப்படி ஐயாறப்பரைப் பூசித்துக் கவிமுகத்தைப் பெற்று மீண்டுந் திருமலையை யணுகி ஸ்ரீகண்டபால இருபத்தெட்டுத் திவ்வியாகமங்களையுங் கேட்டுக் குரு சந்தானத்தை நாட்டி வருகின்றார் என்று அகத்தியமுனிவர் உரைப்பச் செவியேற்ற வருணன் அம்முனிபுங்கவரோடு பஞ்சநதி க்ஷேத்திரத்தைச் சேர்ந்து செபபியேசுரரை உள்ளன்போடு வணங்கி ஆனந்த பூரிதனாய்ப் பிற மாக்கதைகளையும் அநுக்கிரகிக்க வேண்டுமெனக் குறுமுனிவர் கூறலுற்றார்.



௮. நியமேசச் சருக்கம்.

———:(*):———

திருவுறையூரிற் சோழர் குல திலகராக விளங்கிய கரிகாற் சோழர் என்பவர் தமது சோழதேசத்தை மனுநீதி கடவாது மெய்யறமும் சிவநேயமும் மலியச் செவ்விதின் அரசு புரிந்து வருங் காலத்தில், வடதிசையினும் தமது கொற்ற வெண்குடை நிழற்றத் திக்கு விஜயஞ் செய்யக் கருதிப் பெருஞ் சேனையும் பரிவாரமுஞ் சூழப் புறப்பட்டுத் திங்களஞ் சடையான் திருப்பதிகள் அனந்தமுங் கண்டு தரிசித்துக் காஞ்சிபுரத்தைத் திருநகரமாகக் கண்டு, ஏகாம்பரநாதர் திருவருள் பெற்று வல்லமாநகரில் மருந்தீயெழ நோக்கிக் கங்கைக் கரை யடைந்து அகிலேசரைப் பணிந்து மேருவரைப்பாற் சென்று தமது புலிப் பொறியை யதன்மே லிட்டுக் கனகம் பறித்துத் தம் சேனைகட்குப் பரிசிலாக ஈந்து பெரும் பொருளோடு மேற்றிசை வழியே திரும்பிப் பல சிவதலங்களைப் பணிந்து ஸஹ்யாத்ரியை யணுகிச் சிவ பெருமா னருளுற்றுக் காவிரிப் புனல் எங்கும் உள்ளடங்கிட நற்கரை கட்டிக் கீழ்த்திசை நோக்கிப் பஞ்சநதிக்கண் மஹாதேவரைத் தொழுவாரும் தேர் புதைந்து திகைத்தார். உடனே பல கம்மியர் பெருமுயற்சி செய்து அவ்விரதத்தை மேலெழுப்பப் பார்த்தும் முடியாதாக, புரோகிதரும் மந்திரிமாரும் இஃதோர் சிவ யோகியின் செயலாகும் என்றனர். அதன்மேல் ஆழ அகழ்ந்து பார்க்கையில் அங்குச் சிவலிங்கமும் சத்தியும் சிவகுமாரர்களும் சப்தமாதரும் சண்டேசரும் சூரியனும் ஓர் முனிவரும் காணப்பட்டனர். அப்பொழுது கரிகாற் பெருவளவர் அம் முனிவரது பாதத்தில் விழுந்து பணிய, அவர் அச் செம்பியருக்கு யாவரையும் வெல்லக் கூடிய தண்டொன்றை யளித்துத் திருநந்தி தேவராலும் தேவர் முனிவர்களாலும் பூசிக்கப்பட்ட அம்மகாலிங்கத்தின் பிரபாவத்தைக் கூறி அந் நகரத்தைப் புனருத்தாரணஞ் செய்யக் கூறினார். பிறகு நியமேசராகிய அம்மகா யோகியின் கட்டளைப்படி நதியின் குளப்படியில் பொன் வெல்லம் கருங்கல் மூன்றையும் எடுத்து அந்நகரத்தையும் திருவாலயத்தையும்

புதுக்கி நிர்மாணித்துச் சைவாகமத்தின்படியே சோழர்குலவளத்தார் பிரதிஷ்டை செய்து நித்திய நைமித்திக விசேஷ பூஜைகளும் உற்சவங்களும் வேண்டிய நிபந்தம் அமைத்து நடத்திச் சிவபெருமான் திருக்காட்சி உமா சகிதராய் வெள்ளிய விடைமேல் தந்தருளத் தரிசித்து ஆனந்தமுற்றார். அந்நிலையில் பரமேசுரன் நியமேசருடன் மறைந்தருளினார் என்று அகத்தியர் கூறி அதன்மேல் நாயன்மார்களது திவ்விய சரித்திரத்தைக் கூறுகின்றார்.




௯. வாகீசச் சருக்கம்.

——:(✕)——

திருநாவுக்கரசு நாயனார் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனாருக்கும் மாதினியாருக்கும் திலகவதியாருக்குப் பின்புத்திரராய்த் திருவவதரித்து மருணீக்கியாரென நாமகரணஞ் செய்விக்கப் பெற்றுக் கலைகளில் வல்லவராய்ச் சமணசமயஞ் சார்ந்து தருமசேனராகிப் பின்னர் அச்சமயத் துயரம் நீங்கச் சிவபெருமானருளால் சூலைநோயால் இடரெய்திப் பாடலிபுத்திரத்திற் பாழி யொழித்துத் திருவதிகைப்பதி வந்து தமக்கையார் கருணையால் திருவெண்ணீறு சாத்தித் திருப்பதிகம் பாடி நோய் தீர்ந்து திருநாவுக்கரசராய்ச் சமணரால் நீறு விஷம் யானை வேலை இவற்றை நீந்திச் சூலம் கொடியிடபம் விளங்கச் சாத்தி அப்பூதியடிகளது குமாரர் விஷத்தால் மாய்ந்ததை மாற்றி வீழிமிழலையில் அருட்காசு பெற்று வேதாரணியத்தில் கதவு திறக்கப் பாடி வடதிசை சென்று காசியை வணங்கிக் கொண்டு ஸ்ரீ கைலாச தரிசனஞ் செய்தற் பொருட்டுக் கற்சுர வழியே சார மூலங்களைப் புசித்துச் செல்லுகையில் கைகால் தேய்ந்து மார்பால் நகர்ந்து தசை நைந்து சிந்த எலும்பு முறிந்து பின் புரண்டு புரண்டு தேகம் முழுதும் அரையவும் திருமலையிடத்தே பதிந்த அன்பின் உறுதியால் மெல்ல நகருதற்கு முயன்றும் கூடாது வழியிலே கிடந்தார். அப்பொழுது பரமேசுவரன் அப்பரை மீளவுந் தமிழ்நாட்டிற் செலுத்தித் திருத் தேவாரத்தால்

ஆன்ம கோடிகளை யுய்விப்பதற்கும் வாகீச முனிவரது கருத்தை முடிப்பதற்கும் திருவுளங்கொண்டு ஆங்கோர் தடாகத்தை யுண்டாக்கித் தாம் ஓர் முனிவர் வடிவங்கொண்டு நாயனார் முன்னர்த் தோன்றி அவர் கருத்தின் உறுதியைக்கண்டு மறைந்தருளி ஆகாயத்தில் அசரீரியாக நின்று, 'நாவுக்கரசனே எழுந்திரும்' என்றார். நாயனார் உடனே அழிந்த உறுப்புக்கள் யாவும் நிரம்பப் பெற்றுச் சிறந்த தேகத்தோடு விளங்கி, 'சுவாமி, தேவரீர் நொடித்தான் மலையில் இருக்கின்ற திருக்கோலத்தை அடியேன் தரிசித்து வணங்கும்படி அருள் செய்யும்' என்று பிரார்த்தித்து இறைவன் திருவாணையின்படியே ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யோதிக்கொண்டு அத்தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் அயனரி தீர்த்தத்தின் மேலே தோன்றி, அத்திருப்பதியிலுள்ள சராசரங்களனைத்தும் தங்கள் துணையுடன் பொலிந்து விளங்குதலைக் கண்டு சிவனும் சக்தியுமாகப் பார்த்து ஆலயத்தின் முன் சென்றார். அவ்வாலயம் திருக்கயிலாயமாகவும், அங்குள்ள பெருமான் திருக்கயிலாச வைபவத்துடன் சிவகணத்தினர் ஆதியோர் சேவிப்பப் பார்வதி தேவியார் சமேதராய் வீற்றிருந்தருளும் ஸ்ரீ கயிலாச நாதராகவும் கண்டு உள்ளங் கனிந்து தேவாரம் பாடி மகிழ்ந்த அளவிலே அக்கோயில் பழம்படியாகவே விளங்கிறது. அதன் பின்னர்த் தாண்டக வேந்தர் சிவஸ்தலங்களைக் கண்டு வணங்கிப் பூம்புகலூர் அரன் பாதம் பொருந்தி யின்புற்றார். சுவாமிகள் ஐயாற்றின் மேற் பாடிய திருப்பதிகங்கள் க௩.



க௰. சம்பந்தர் சருக்கம்.

———:(o):———

சீர்காழியில் வாழ்ந்த சிவபாத விருதய ரென்பவர் சமணம் பௌத்தம் முதலிய அவைதிக சமயங்கள் வளர்ந்து வேதாகமங்களிற் கூறப்பட்டுள்ள சற்சமயமாகிய சைவசமயம் அருமையாவதைக் கண்டு புறச்சமயங்களைக் களையவல்ல சற்புத்திரரைப் பெறச் செய்த புண்ணிய மேலீட்டால் திருஞான சம்பந்தப் பெருமான் திருவவதாரஞ் செய்தருளினர். அந்தக் கவுணிய குலத்து அந்தணர் பெருமான் உமையம்மை அளித்த ஞானப் பாலையுண்டு சிவஞான சம்பந்தராகித் தமிழ் வேதம் திருவாய் மலர்ந்து கோலக்காவில் தாளம் வாங்கிப் பின்னர் முத்துச்சிவிகை முதலியன பெற்று முயலகன் ஆற்றி முத்துப் பந்தர் எய்தி பொற்கிழி பெற்று அரவின் விஷத்தைத் திருமருகலில் தீர்த்து வீழிநகரில் காசு பெற்று மறைக்கதவம் பிணித்துப் பாண்டியன் கூனும் வெண்ணீறால் விடுவித்து கனல்வாதம் புனல்வாதங்களால் சமணரை வென்று கழுவில் ஏற்றித் திருப்பதிகத்தால் கொள்ளம் பூதூரில் ஓடம் ஏறிச் சுவாமியைத் தரிசித்துத் தெளிச்சேரியிற் புத்தரை அழித்துத் திருநாவுக்கரசு ருறைவிடந் தேடிவந்து அவரோடு பூந்துருத்தி நாதர் திருவடியை வணங்கித் திருமடத்தில் வீற்றிருந்த காலையில் அப்பருடைய முகவாட்டத்தினைக் கருதி வினவ, திருநாவின் மன்னர் காழிப் பிள்ளையாரைப் பார்த்து, 'பூந்துருத்தி நாதருக்குப் பூசை செய்வதற்கு மாறு செய்து அங்கர் மேற்பாலுள்ள திருமால் பூசை கொள்வது அமையுமோ' என்றார். அதன் மேல் ஞானசம்பந்தர் காவிரிப் பெருங்கால் அங்குள்ள வைணவரைப் பலவகையாலுங் கலக்கஞ்செய்து மேக வருஷத்தாலும் வாட்டி வருத்தி அனைவரைக் கடலிற் புகுத்தி மடிவித்து, பூந்துருத்தி மேற்பால் மாயனார் கோயிலுக்குட் சென்று மாயனைச் சிவனாகப் பாட, மாயவனும் உருகி ஒன்றிய சேயிழை பங்கன் அங்கச் சிவலிங்க வடிவம் ஆனான், மாயவன் பரிவாரங்களும் பரன் பரிவாரங்கள் ஆயின; அக்கோயிலும் சிவாலயம் ஆயிற்று. அரியுருச் சிவவுருவாதலை இருவரும் கண்டு தரிசித்து ஆனந்தம் அடை

ந்தனர். பின்னர் ஒருநாள் பொன்னியாற்றில் ஐந்து குண்டத்தில் ஐந்து வைணவர் இருக்கக் கண்டு பெருமானவர்க்கு வெண்ணீறளித்துப் பஞ்சநதிச் சைவராக்கிச் சிவபெருமானை யருச்சிக்கும் உரிமை நல்கி, அவர் வேண்டிக் கொண்டதன்மேல் சிவபிரானருளால் காவிரி பெருகி வரச்செய்து அந்நீர் கடலின் முழுகி இறந்தவரை மீட்டும் உயிரோடு கொண்டுவர அவர்களையும் சைவர் ஆக்கினர். அக்காலை சோழ பூபதி வந்து இருவர் பாதத்திலும் வீழ்ந்து பணிந்து அவர்கள் கட்டளைப்படி பூந்துருத்தி நாயகருக்கு இருமடங்கு நிபந்தம் வைத்தான். அதன்மேல் அப்பர் கன்னி நாடு அடைந்தார். சம்பந்தர் திருவையாறடைந்து திருப்பதிகம் பாடித் துதித்து, ஒத்தூரிற் காய்ப் பனையைக் காய்க்கச் செய்து, மயிலாப்பூரில் அங்கம் பூம்பாவை ஆக்கி, காழியம் பதிசேர்ந்து, பெருமணத்தரனை யெய்தினர். சுவாமிகள் பாடியருளிய திருப்பதிகங்கள் - கரு. ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திர வெண்பா - க.



கக. வன்றொண்டச் சருக்கம்

——:(◉):——

ஸ்ரீ கயிலாயகிரியிலே சச்சிதானந்த ஸ்வரூபியாகிய பரமசிவனருக்குத் திருத்தொண்டுபுரியும் ஆலாலசுந்தரர் பார்வதிதேவியாருக்குத் திருப்பணி செய்யும் அனிந்திதை கமலினி என்னும் திருநாமங்களையுடைய மாதர் இருவரையும் பார்த்து அவர்கள் மேற் காதல் வைத்தார். அவர்களும் அச்சுந்தரரை நோக்கி அன்புகொண்டார்கள். ஆன்மாக்கள் திரிகரணங்களாலும் செய்கின்ற கன்மங்களை யறிந்து அவற்றிற்கு ஏற்ற பலன்களை யூட்டித் தொலைப்பிக்கின்ற பரமகருணாநிதியானவர் அம்மூவரையும் நிலவுலகத்திற் பிறந்து இன்பம் துய்க்குமாறு நியமிக்க, ஆலாலசுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதிசைவப் பிராமணகுலத்திலே சடையனார் என்னும் சிவாசாரியாருக்கு அவர் காதலியாராகிய இசைஞானியாரிடத்தில் ஆன்மகோடிகள் சைவசமயமே மெய்ச்சமயம் என்றுணர்ந்து அதனை அநுசரித்து

உய்யும் பொருட்டுத் திருவவதாரஞ் செய்தருளினார். அதன்பின்னர் அவ்வண்ணமே அனிந்திதையாரும் கமலினியாரும் சங்கிலியாராகவும் பரவையாராகவும் உதயஞ்செய்தார்கள். சுந்தரமூர்த்தியானவர் திருவருட்டுறைத் தேவர்பெருமானால் ஆவணங்காட்டி மணம் விலக்கித் தடுத்தாட்கொள்ளப்பெற்று வன்றொண்டர் ஆகிப் பல சிவநகரங்களிற் திருப்பதிகங்களைப் பாடித் துதித்துத் திருவாரூரிற் பரவையாரை மணந்து வைகி விறன்மிண்ட நாயனாரால் திருத்தொண்டத்தொகை பருளிக் குண்டையூரில் நெல் பெற்றுத் திருப்புகலூரிற் செங்கலைச் செழும்பொன்னாகச் செய்து திருமுதுகுன்றர் தந்த பொன்னைத் திருமணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தெடுத்துத் திருவொற்றியூரில் நங்கை சங்கிலியாரை வேட்டுத் திருவாரூர் சேர்ந்து வன்மீகநாதர் தூதாகச் சென்று நங்கை பரவையார் புலவி நீங்கக் கூடி வசிக்குங் காலத்தில், சேரமண்டலத்தைக் கொடுங்கோளூரி லிருந்து அரசுபுரியும் கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமானாயனார் சுந்தரர் பத்திமையை யறிந்து ஆரூர்வந்து நட்புக்கொண்டு அவரோடு மதுரை முதலிய சிவதலங்களைக் கண்டு ஆரூர்க்குத் திரும்பி வசித்துப் பல நாட்சென்றபின் சுந்தரரைத் தமதூர்க்கு வரும்படி பிரார்த்திக்க, இருவரும் எழுந்து போய்ப் பட்டமங்கத்தரை வணங்கிக்கொண்டு, திருவாரூரை நீங்கி, மேற்றிசையை நோக்கிப் பொன்னிநதியின் தென்கரை மார்க்கமே சென்று, திருக்கண்டியூரைச் சார்ந்து சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டுப் போகக் காவிரியின் வடகரையில் திருவையாறு தோன்ற, உதியர் பெருமான் வணங்கித் தமது தோழரைப் பார்த்து, 'சுவாமி, என்னுள்ளம் ஐயாறரைக் கண்டு தரிசிக்க அவாவுகின்றது, நாம் இவ்வாற்றைக் கடந்துபோய்த் துதிப்போம்' என்றனர். சுந்தரமூர்த்தி இருகரையும் மோதி யோடச் செல்லாதவாறு பெருகுவதைக் கண்டு திருப்பதிகந் தொடங்கித் திருப்பாட்டுதோறும் ஐயாறுடைய அடிகளோ என்று அழைத்தார். கடவுள் கூற அழைக்கக் கேட்டுக் கத்திக் கனைக்கும் ஆவைப்போல் யாவையும் யாவரும் கேட்ப ஓலம் என்று அருளினர். காவிரி பிரிந்து வழிகாட்டி மேற்றிசையில் நீர் பளிங்குமலைபோல நிற்க, கீழ்த்திசையில் நீர் கீழ்நோக்கி வடிந்து நடுவழி மணற்பரப்பா யிருந்தது. இங்ஙனம் அருள் செய்யக் கணங்களோடு எழுந்துவந்த கண்ணுதற் கடவுள் கரந்த

னார். இருவரும் களித்துக் காவிரி மணலிற் சார்ந்து கூத்தாடிச் செம்பொற் சோதியைச் செறிமணலாற் றிட்டைச் சேவித்துக் கம்பித்து உள்ளம் கரைந்து கண்ணீர் வார அம்பொற் கோயிலை அடைந்து ஐயாறனைத் தொழுது அன்பால் பிரதக்கிணஞ் செய்து தரிசித்துத் திரும்பிக் காவிரிநதியின் முன்சென்றபடியே நடு வழியே வந்து தென்கரை யேறினார். அக்கணமே மலைபோல நின்றநீர் தொடர்ந்து பாய்ந்தது. இருவரும் இதனைக்கண்டு வியம்பித்து முறையே மேற்றிசை வழியே கொங்குநாடு கடந்து மலைநாட்டிற் கொடுங்கோளூரை யடைந்தனர். அங்கிற் கடவுளர்ச்சனை செய்து சேரர் பெருமாளை பெருவழி படுசெய்யப்பட்ட தம்பிரானிருந்தார். அவரிடம் விடைபெற்று மீண்டு வருகையில் பெரும்பொருளைக் கள்வர் பறித்திடப் பாடி வாங்கி முதல்வர்பாற் பின்னைய யழைத்துத் திருப்பெயர் சேரர் பெருமானைக் கூடி அவர் பரியுகைத்துச் செல்ல வெள்ளானை யேறித் திருக்கயிலையிற் புகுந்து உரிமை பெற்ற பேரின்பமெய்தினார். சுவாமிகள் பாடியருளிய திருப்பதிகம் பாடும் பரிசு என்று தொடங்குவது க.



கஉ. சைவச சந்நப.



தேமாம் பொழில் சூழ் திருவையாற்றில் சிவ பரமசிவ பூசை செய்யும் ஆதிசைவர்களில் ஒருவர் கங்கை நீராடக் காசியம்பதிக்குச் சென்ற காலத்துப் பறைமறையவர் இருந்து அவரும் அம்மறையவர்து காணிக் கிராமங்களைக் கவர்ந்து அவர் மனைவிக்கும் மைந்தனுக்கும் வருத்தம் வருவிக்க, அம்மாது பஞ்சநதியிடம் சென்று செஞ்சரணத்து வீழ்ந்து குறையிரந்தாள். அப்போது சிவபெருமான் விருத்தராய்ச் சிவவேதியர் உருக்கொண்டு துடி நரை தோன்றக் காதிற் குண்டலம் இலங்கத் திரிபுண்டரமும் உருத்திராக்க மணிவடமும் பூணூலும் திகழக் கைத்தண்டுடன் கங்கைநீர்க் காவடியேந்தி யெழுந்தருளி வந்து அவ்வேதியர் மனை புகுந்து அவர் பத்தினியை உசாவி யறிந்து சூரிய தீர்த்தத்து ஸ்நானஞ் செய்து திருக்கோயிலிலீசனை நியமப்படி பூசித்து ஓர் மடத்தில் தங்கியிருந்தனர். இத்தருவாயிற் கங்கையாடச் சென்ற

சிவதத்விஜர் அவ்விடம் வரப் பார்த்தவர் யாவரும் ஐயங்கொண்டனர். அந்தண வடிவந் தாங்கிய சிவபிரான் இவரைப் பார்த்து, 'நீ யார்? எங்கே வந்தாய்?' என்று வினவ அவ்வேதியர், 'இச் சிவனைப் பூசிக்கும் அந்தணர்கள் இருபத்து நால்வருள் ஒருவனானேன்' என்றார். அதற்குச் சிவனார் 'யானே' என்றார். இருவரும் தந்தமக்குரிய ஆவணங்களைக் காட்ட, அவையினர்கண் இருந்த பலரும் மையெழுத்தைக் கூர்ந்து பார்த்து அந்தணருடைய ஓலையே மெய்ச்சாசனம் என்று கண்டனர். அப்போது சைவர் வென்றவராகத் துதிக்கக் கூறி; சிவபெருமான் விசுவரூபியாய் உமையம்மை திருக்கோலத்தொடும் விளங்கத் தோன்றி 'நமது ஆதிசைவராகிய இவரை வழிமுறையவராகச் செய்யுங்கள். இவர் காணி உரிமைகள் இருபத்து அதிகமாகக் கொடுங்கள்' என்று பலருங் கேட்பக் கூறிப் பரிவித்தனர். இம்மொழியைக் கேட்ட அந்தணரும் மகா ஜனங்களும் ஆனந்தக் கடலில் மூழ்கினர். இறைவன் தன் உருத்தரக்கோலமாய் அந்தர்த்தானமாகினர். அகத்திய புனிதர் இம் மான்மியத்தை உரைக்கக் கேட்ட வருணனும் பிறதேவரும் அன்புடன் ஐயாறப்பரை வணங்கிப் போயினர் புகலுகின்றனர்.

ஞானச் செல்வராகிய சிவம் பழகிய பெரிய பாவலராகிய ஞானக்கூத்தர் இயற்றிய இனிய திருவையாற்றுப் புராணத்தைக் கற்பார் யாவரும் சிந்தித்து முத்தியும் பெறுவர்; சிவலோகத்தில் அழகான நிலை பெறுக, பரசிவனது திருப்பணி வளர்க, பாவங்கள் நீங்குக, மாதேவர் என்று வழுத்துவாரும் சிறந்த புகழ் நீடூழி வாழ்க. சுபம்.

திருவையாற்றுப் புராணம்

வசன சுருக்கம்

முற்றிற்று

—ப. அ. முத்துத் தாண்டவராயன்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்தினின்றும் அச்சிட்ட சாத்திரங்கள் முதலியன.



அச்சான நூல்கள்.

1. நித்தியகன்ம நெறி
2. ரூபாதி தசகாரிய வகவல்
3. சம்பிரதாய தீபம்
4. சித்தாந்த நிச்சயம்
5. சந்திரகலாமாலை தசமணிமாலை முதலிய குரு தோத்திரத் திரட்டு
6. திருமுல்லை வாயிற்புராணம்
7. திருவாசிரியந்தாதி
8. திருவையாற்றுப் புராணம் I

அச்சிலிருப்பவை

1. வருணாச்சிரம சந்திரிகை (வடமொழி)
2. சிவபோக சாரம்

ஆராய்ச்சிலிருப்பவை.

1. முத்திநிச்சயப் பேருரை
2. உமாபதி சிவம் திருமுறைத் திரட்டு
3. ஞான தீக்ஷை
4. ஞான பூசை
5. ஞான பூசாகாரணம்
6. ஞானந்தியேட்டி
7. போசனவிதி
8. ஞானாவரண விளக்கம்
9. சோமசம்பு பத்ததி (வடமொழி) தென்மொழி வியாக்கியானம்
10. வருணாச்சிரம சந்திரிகை (தென்மொழி) வியாக்கியானம்
11. திருவையாற்றுப் புராணம் II



திருவையாற்றுப் புராணம்

பாட்டு முதற்குறிப்பு அகராதி.

——:(*):——

அகராதி